O.S.04-2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.04/2018

வாதி தரப்பு 1வது சாட்சி மணி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மணி | வயது | : | 63/24 |
| தகப்பனார் பெயர் | : | சுப்பையா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | பணி ஓய்வு) மின் வாரியம்) |

நாள்-01.04.2024

வா.சா.1

**<u>1,4,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வழக்கிற்கும், முதல் விசாரணை நிருபண பிரமாண வாக்குமூலத்திற்கும் தகவல் சொன்னது நான்தான்.

2) நான் பி.காம்., வரை 1978 முதல் 1981 வரை சிதம்பரம், அண்ணாமலை யுனிவர்சிட்டியில் படித்தேன்.

3) 1983ம் வருடம் மே மாதத்தில் பணியில் சேர்ந்தேன். எனக்கு 1988ம் வருடம் திருமணமானது.

4) திருமணத்திற்கு பிறகு நானும், எனது மனைவியும் கடியாபட்டியில் வசித்தோம்.

5) பூர்வீக சொத்தில் போர்வெல் மற்றும் கிணறு எதுவும் கிடையாது. மழை பெய்தால்தான் விவசாயம் செய்ய இயலும்.

**1,4,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.